# திறவுகோல்

2051 வைகாசி
மாத இதழ்

பொன்ஏர் பூட்டாத பேரன்

தமிழகத்தில் மது வரலாறு

விடுதிகளாகும் வீடுகள்

காந்தியத்தில் உதிர்ந்த தியாக பூவே



வெளியீடு
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# பொன்ஏர் பூட்டாத பேரன்



பட உதவி: இணையம்

சித்திரை மாசம் பொறந்தாச்சு...

வருச பொறப்பு என்ன பெரிய வருச பொறப்பு ,பொன்ஏர் பூட்டுறது என்னைக்குனுதான் கெழடு கட்டையெல்லாம் ஏங்கி போய் கெடக்கும் .

நெலத்தோட கடந்து நாசமா போனவனுக்கு வேற நெனப்பு ஏது.

பாமணி ஆத்து கரையில பொழப்பு ஓட்டுற பல பேருல ஒரு கிராமத்தான் கோயிந்தன்.

சொந்த பந்தத்தோட வாழ்ந்தத விட பாமணிஆத்து சுக்கான்னோட தான் அதிகம் வாழ்ந்திருப்பான் கூறுகெட்ட அந்த கெழட்டு பய

காஞ்ச கருவாடு போல மேனி கருத்தாலும், பாதி கால சேரு தின்னாலும்,
மண் புழு போல கை நரம்பு நெலிந்து போனாலும்,அவர் வீட்டு குட்டி செவருக்கு அடித்த சுண்ணாம்பு போல மீசை நிரைத்தாலும் வம்பட்டி பிடித்து வரப்பு வெட்டி வீசுவதில் வாலிபனும் வால்பிடித்து பின்னால் தான் வரவேண்டும்.

அவர் ஊருக்குள்ள நடந்த நடைய வடக்கு நோக்கி வாழ்நாள்ல நடந்து இருந்தார்ன்னா

உலகத்துல கால்வாசி கடந்து இருப்பாரு. அவர் செருப்பு போட்டு நடக்கும்போது பாதம் பூமி மண்ணோட பேசிக்கிட்டே  வரும் அப்படி ஒரு செருப்பு அது.

அவர் வய மண்ணு தான், அவர் பொண்டாட்டிக்கு சக்காளத்தி, ஏன்னா ஒரு நாள் கூட எட்டிப்பாக்காம ராவைக்கு தூங்கமாட்டாரு.

அவர்ட ஒரு வண்டிமாடு இருந்தது.அது ஒரு தனி கத,
கன்னுக்குட்டியா இருக்குறப்பவே வாங்குனது, ஊருக்கு கெழக்க ஒரு ஆள் காசு குடுக்கணும் இவரும் நடந்து நடந்து நாக்கு தள்ளிப்போனது தான் மிச்சம், ஒரு நாள் காசு வாங்குன ஆளே சொன்னான் நீங்களும் அழைஞ்சிகிட்டே இருக்கீயே, வேணும்னா இந்த கன்னு குட்டிய ஓட்டிக்கிட்டு போங்க, காசு வந்த உடனேயே குடுத்துட்டு ஓட்டிகிறன்.

இதுல அவருக்கு உடன்பாடு இல்ல,,,,,,கூட வந்த தொப்ளான் சொன்னான், இனிமே அவன் என்னைக்கு குடுக்க போறான், நீ வாங்க போற
பேசாட்டுக்கு ஓட்டிக்கிட்டு வா என்றான், நட்டம் வந்தாலும் பரவா இல்ல, வித்துப்புட்டு காச எடுத்துக்கலாம்னு சொன்னான்.

வந்த சோலி முடிஞ்ச சந்தோசத்துல ரெண்டு பேரும்,பாலத்தடியில பட்ட சாராயம் குடிச்சிப்புட்டு கன்னு குட்டிய ஓட்டிக்கிட்டு வீடு வந்து சேர்ந்தாய்ங்க.

ஒரு வாரம் வைச்சி இருந்தாரு, ஆனா துடிப்பான கன்னு குட்டி, கருப்பும் சாம்பலும் கலந்த நெறம், விக்க மனசு வல்ல... சரினு வச்சி வளர்த்து வந்தாரு.

இன்னொன்னு மேற்க சகல வீட்டுக்கு பக்கத்து வீட்டுல இருந்து வாங்கிகிட்டு வந்தாரு ,இதை வலமாகவும் அதை எடமாகவும் (வலது இடது) சேர்த்து வளர்த்து வந்தாரு.

ஊர்க்காரன் எல்லாம் கிண்டல் பண்ணுனான் ,ரெண்டு மாட்டையும் ஒன்னா பூட்டுரியே ஒன்னு கிழக்கையும் ஒன்னு மேற்கையும் பூர்வீகத்தை தேடி போக போகுதுனு, அவரு பதில் ஏதும் பேசல.. ஆனா மனசுல நெனச்சிக்கிட்டாரு மனுசனே பூர்வீகம் தேடி போகாதப்ப மாடா தேடி போகப்போகுதுனு,

மாட்ட வெரட்டுனாரு, கொய்......... இந்தர்...... இந்தர்... கொய்.....

ஒரு இரும்பு ஏர் கலப்ப வைச்சி இருந்தாரு, ஆனா அவரு அவரோட அரை கால் சட்டை பருவத்திலே அவங்க வீட்டுல மர கலப்ப வைச்சி இருந்தத பார்த்து இருக்காரு.

கலப்பையோட கைப்புடி அடிக்கடி கழண்டுக்கும், அத ஆசாரிக்கிட்ட குடுத்து பொன்ஏரு பூட்டுறதுக்குள்ள சரி பண்ணி குடுன்னு குடுத்து இருந்தாரு.

சித்திரை மாசமும் பொறந்துச்சு,,,

முழுக்க முழுக்க ஆத்து பாசனம்தான், கிட்டடத்தட்ட அர கோட,
தண்ணியும் இருக்காது, அப்பதான் தாளடி முடிக்கிற பருவம்,
ரொம்ப பேரு மானாவாரியா எள்ளும், உளுந்தும் தெளிச்சு இருப்பான்.
பொன்ஏரு பூட்டுறதுக்காகவே நெலம் தவம் கிடைக்கும்.

ஒரு நல்ல நாள் பார்த்து காலையிலேயே குளிச்சி முழுவி, மாட்ட குளிப்பாட்டி, போன வாரம் சீர் பண்ணுன ஏர் கலப்பயையும் குளிப்பாட்டி,தயார் ஆவாரு கோவிந்தன்.

மொத நாளு வாங்கியாந்த பூவு, பொட்டுகல்ல, சக்கர, சந்தனம், மஞ்ச, குங்குமம், வெத்தலை பாக்கு, அருவா எல்லாம் அவரு மறுமொவ எடுத்து குடுக்கும்,
கொடக்கல்லடியிலே ரெண்டு தேங்கா உருச்சி  வைச்சி இருக்கன், எடுத்தாம்பாரு பொண்டாட்டிகிட்ட.

எட்டு வயசு ஆன பேரன போய் எழுப்புவாரு, தம்பி எழுந்திரிச்சி வாடா பொன்ஏரு பூட்ட போவணும், நான் வல்ல, என்ன விடு என்பான்.

அர தூக்கத்துலயே பொட்டுகல்ல சக்கரையை பார்ப்பான், துள்ளி குதிச்சி எழுந்திரிச்சி உடியாறுவான்.

அன்னைக்கு ஊரே திருவிழா கோலம் தான் ,மண்ண கிண்டி பொழைக்கிற அத்தன பயலும் தோளுல கலப்பையும், கையில மாடுமாதான் சுத்திகிட்டு இருப்பான்.

மொவனையும் கூட்டிகிட்டு, பேரனையும் கூட்டிகிட்டு விடியிற பொழுது இன்னைக்கு வயல்லதான் இருக்கணும்னு மாட்டு கிட்ட பேசிக்கிட்டே கௌம்புவாரு, பேரனும் பொட்டுகல்ல சக்கரை தட்டோட பின்னாடியே போவான்.

தரிசு நிலத்துல எல்லாத்தையும் எடுத்த வப்பாறு, ரெண்டு மாட்டுக்கும் இடையில மோத்தடி நடுவுல கலப்பைய போட்டு கட்டி தயார் பண்ணி வப்பாறு.

தட்டுல எல்லாத்தையும் எடுத்து வைச்சி, சூடம் ஏத்தி காமிப்பாரு,
மாடா போன மனுசனுக்கும்,,,,,
மனுசனா போன மாட்டுக்கும்,,,,
துன்னூறு பூசி விடுவாரு, எல்லாருக்கும் பொட்டு கடலையை அள்ளி குடுப்பாரு, பேரனுக்கு மட்டும் கூடுதலா ஒரு கை. தாத்தாவுக்கு தெரியாதா என்ன பேரனுக்கு என்ன புடிக்கும்னு.

இடுப்புல கட்டிய துண்டோட மாட்ட வெரட்டுவாரு.. கொய்......... இந்தர்......
இந்தர்........ இம்பாரு... ரெண்டு மாடும் சம்மதம் சொல்லி தலையை ஆட்டிக்கிட்டே கெளம்பும்.

கலப்ப நிலத்துல கீற ஆரம்பிச்சதுமே பொறந்த பலன அடைஞ்சது மாரி அப்படியே பொங்கி வரும் அந்த புழுதி மண்ணு.

ஒரு தடவ அவரு சுத்தி வந்த உடனேயே அடுத்த தடவ மொவன் வாங்கி ஓட்டுவான், பேரன் தயங்கி தயங்கி நிப்பான், மொவன் முடிச்ச உடனேயே பேரனை கூப்புடுவாரு ,அவன் அர மனசோடையே நிப்பான், நான் நிக்கிறேன்ல.. வாம்பாரு.

போய் கலப்ப கை புடிய புடிச்சிப்பான்,மாட்ட தொட்டு பார்ப்பான்,
இந்த தடவ மாட்ட அதட்ட மாட்டாரு, மாடு வேகமா போகும் பேரன் இருக்கான்னேன்னு......

இப்ப தாத்தனும் பேரனும் சேர்ந்து கலப்பைய புடிப்பாய்ங்க, மாட்ட லேசா பின்னாடி தட்டுவாரு நகர ஆரம்பிக்கும்,
மாட்டோட எட்டு காலு இழுவைளையும்,
மனுசனோட நாளு காலு கண்காணிப்புலயும்,
ஒரு காலு ஏரு சீரா போகும் ..,,,,,,,,,,,,,,,,,,,,,,
ஒரு தடவ முடிச்ச ஒடனே மறுபடியும் எர ஓட்டிக்கிட்டு போவாரு,,,இப்பயும் தெரியும் அவருக்கு பேரனுக்கு என்ன புடிக்கும்னு.

அவரு கையாள..,,, பேரன் கையையும் கலப்பையையும் சேர்த்து புடிக்கை யில அவருக்கு ஒரு சந்தோசம் வரும் பாரு
அவரு நெனப்பாரு காலையிலேயே பட்ட சாராயத்த குடிச்சிட்டு வயலுக்கு வந்தோமா, ஐப்பசி மாச அட மழையும் மார்கழி மாச கடும் பனியும் சேர்ந்து நம்ம மேல வீசுதேனு, திக்கு மூக்கு ஆடி போவாரு ..

எனக்கு அப்புறம் ஏர் கலப்ப புடிக்க என் வாரிசு வந்து இருக்கு வயலுக்குனு வெத்தலைய மடிச்சி வாயில போடுவாரு,,,,,
சொத்து பத்திரம் மாத்துறது என்ன, இப்பவே கலப்பைய கை மாத்திட்டன் பாருன்னு கொஞ்சம் சீவல அள்ளி போட்டு கொதப்புவாரு.

இத மேட்டுல இருந்து வேடிக்கை பார்த்த பன்னீர் சொன்னாரு,,,
பாட்டனும் பேரனும் பொன்ஏரு பூட்டுறத பார்த்தா இன்னைக்கு பொழுதுக்குள்ள மழை வரும்டோய்.......... கெழவன் ஒரு நமட்டு சிரிப்பு சிரிப்பாரு

கரு நாக்கு கார பய ,சொன்ன மாதிரியே அந்திக்கு மானம் சொழட்டி சொழட்டி அடிச்சது.

அந்த மழ வேற யாரும் இல்ல, கோயிந்தனோட அம்மா பொன்னி கிழவிதான்,,,
தான் வம்சம் பொன்ஏரு பூட்டுன பூமிய பார்க்க மழையா எறங்கி வந்தா அந்த கெழட்டு செருக்கி.

(சிரிப்புக்கு அர்த்தம் இதுதான்,,,,, இந்த குடும்பத்துல எந்த நல்லது கெட்டது நடந்தாலும் நான் மழையா எறங்கி வருவேன்னு அந்த மாரு காஞ்ச செருக்கி கெழவன்கிட்ட சொல்லிட்டு போய் இருக்கா)

சில ஆண்டுகள் கழிந்தது,,,

அவரது மகன் குடும்பம் பேரனுடன் நகர்புறத்துக்கு இடம் பெயர்ந்து இருந்தார்கள் , முன்பை போல அவருக்கு பேரனுடன் பேசி பழக முடியவில்லை... பாசம் பேசினால் தான் வருமா என்ன ,காலம் நகர்ந்தது.

கால சூழ்நிலையால் அவரது மகன் குடும்பத்திற்கு அடிக்கடி வந்து கிழவனை பார்க்க முடியவில்லை, கிழவன் திங்க ஆசை படுவானேன்னு மறுமொவ முடிந்த பலாரத்தை பண்ணி, பேரன் எப்போதாவது கொண்டு வந்து குடுத்திவிட்டு போவான்.

தான் உயிருடன் இருக்கு போதே தன் வாரிசுகள் நிலத்தை விற்பதை கேட்ட அந்த கிழவன் நிலை குலைந்து போனார், கோடையில் கருகிய வாழை குருத்தை போல கருகினார்..

அவரும் வயது முதிர்ச்சி அடைந்து ஒரு நாள் தன் மகன் முகம் பார்த்த படியே மாண்டு போனார்..
பள்ளி சென்ற பேரன் சேதி கேள்விப்பட்டு, நாளு மயிலு கதறிக்கிட்டு நடந்தே ஓடுனான், தாத்தான்னு போய் கால் மாட்டுல சாஞ்சான்....

தாத்தன் போய் சேர்ந்துட்டான், அவனுக்கு அப்பறம் இந்த மண்ணு மலடா போப்பதேனு பேரன் தேம்பி தேம்பி அழுதான்.,,,,,, தாத்தானு....

அவரு பொண்டாட்டி புள்ளயள விட அதிகம் அழுதது வம்பட்டியும், வண்டி மாடும், இடுப்பு வாரும், வெத்தல கடுதாசியும்தான்....

மாட்டு கவனையிலே இருக்குற வண்டி மாடு ஓ,,,,,,,,,,ன்னு ஒப்பாரி வச்சி அழுது, தன் கண்ணீராலேயே நெய் பந்தம் புடித்தது,,,,,,,
அந்த மாட்ட பொறுத்த வரைக்கும் தார் குச்சி பயன்படுத்தாத தகப்பன் அவரு..

வம்பட்டி களி கூட கிழவன் கை இனிமேல் நம்ம மேல படாதா என வெம்பி வாடி வதங்கிதான் போனது

அவரு செத்த அன்னைக்கும் மழை பிச்சிகிட்டு அடிச்சது,,,,..
வேற யாரு அந்த பொன்னி கிழவிதான் தான் மகன், மண்ண விட்ட வந்துட்டானேனு,
நான் வளர்த்த மொவனேனு அழுது பொலம்பி தன் கண்ணீராலையே ஆறா ஓட வச்சா..

கெழவிக்கு தான் மகன் செத்த துக்கத்த விட தான் மண்ணு சாக போகுதேனு தான் துக்கம் அதிகம், இடியா இடிச்சு ஒப்பாரி வச்சு ஊர கூட்டுனா..

ஊரெல்லாம் ஒரே பேச்சு கோயிந்தன் புண்ணியம் பன்னுன ஆளுயா செத்த அன்னைக்கி என்னமா மழ பேயுது பாரு.,,,

கோவிந்தாஅ கோவிந்தா.... கோவிந்தாஅ கோவிந்தா என கிழவன் பேர சொல்லியே பல்லாக்கு தூக்கி கொண்டு போனார்கள்..

இறுதியில் அவர் எரிந்து சாம்பல் ஆகி,,,,,,,,
கிழக்கில் இருந்து மேற்கில் அடிக்கும் காற்றில் கலந்து, பறந்து தன் நிலத்தை வந்து அடைந்தார்.

கிழவன் குடி இருந்த இடமும் கோட்டை போய்டுச்சு, அந்த கிழவனுக்கு அப்புறம் அந்த குடும்பத்திற்கும் கிராமத்திற்கும் ஆன உறவு அறவே அத்து போச்சு.... இப்ப பேரனுக்கு முப்பது வயசு,,

இத்தனை வருடங்கள் கழித்து இன்றைக்கும்..
பாமணி ஆற்றில் அடிக்கும் காற்றிலும்,,,
அடர்ந்த காட்டாமனுக்கிலும்,,,
கரைந்து போன சுக்கானிலும்,,,
பட்டு போன மாமரத்திலும்,,,
குப்பையே கொட்டாத குப்பை குழியிலும்,,,
வேர்வையையும் தண்ணீரையும் சேர்த்து ஊத்தி வளர்த்து,சரிந்து போன தென்னம் புள்ளையிலும்,,,
அழிந்து போன ஆரசுபதி மரத்திலும்,,,
வேர் அருந்த வேப்ப மரத்திலும்,,,
மூச்சடங்கி போன மூங்கி குத்திலும்,,,
கொடம் கொடமா தண்ணீர் ஊற்றி வளர்த்த கொய்யா மரத்திலும்,,,
பாழாய் போன பலா மரத்திலும்,,,
கரையான் அரித்த குட்டி சுவரிலும்,,,
புயலில் சாஞ்ச பூசண மரத்திலும்,,,
பால் வத்தி போன கிளுவ போத்திலும்,,,
முதுகு ஒடிந்து போன மூங்கி முள்ளிலும்,,,

நொறுங்கி போன மாட்டு தண்ணீர் தொட்டியிலும்,,,

அந்த கிழவன் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறான்.

இன்னைக்கும் அந்த கிழவன் மூடா விழியுடன் முள்ளு வேலியையே, பார்த்து கொண்டு இருக்கிறான் தன் வாரிசின் வரவை தேடி....,,,,,,,,,

இன்னைக்கும் அந்த இத்து போன கெழவன் பேரன கூப்டுகிட்டே இருக்கான்,,,
(அது பேரனுக்கு மட்டும்தான் கேட்கும்)

''எலேய் நான் வளர்த்தவங்கெளா, சித்திர பொறந்துட்டுயா,
இந்த வருசமாவது பொன் ஏர் பூட்ட வாங்கடா''.....

**அறிவுரை:** கிராமத்தை விட்டு நகரத்தில் வாழும் கடைமடைவாசிகளே கிழக்கில் இருந்து வரும் காற்றை தயவு செய்து சுவாசிக்காதீர்கள்,,,,,,,, உங்கள் தாத்தா அதே காற்றில் கலந்து இருக்கலாம்,,,,,,,,, அந்த காற்று என்னை போல உங்களையும் உறக்கம் இன்றி செய்யலாம்.



கழிமுகத்தான்

# உழைப்பாளர் தினம்

உழைப்பாளிகளின்
வியர்வைத் துளியிலிருந்து
துளிர்த்தெழுகிறது உலகம்!

பாட்டாளிகளின்
உழைப்பில்
அடங்கிவிடுகிறது வாழ்க்கை!

உழைப்பின் உயர்வை
இரத்த நாளங்களில்
நித்தம் நித்தம்
சத்தமிட்டுச் செல்கிறது
வியர்வைத் துளிகளோ
முத்தமிட்டு வழிகிறது

பற்சக்கரங்களின் சுழற்சியில்
பாட்டாளி வர்க்கத்தின்
வாழ்க்கைச் சக்கரம்
உருண்டோடுகிறது

உழைத்து உழைத்து
காப்புக்காய்த்த கரங்கள்
ரேகைத் தேய்ந்த
கதைச் சொல்லும்

நடந்து நடந்து
ஓய்வறியா கால்கள்
வறுமைக் கோட்டின்
நீளத்தை அளக்கும்

பசித்து பசித்து
ஒட்டிய வயிறுகள்
இருண்ட வாழ்வை
படம் பிடிக்கும்

அஃறிணையெல்லாம்
உழைப்பால்
உயர்வு பெறுகிறது!
உயர்திணையெல்லாம்
உழைத்தே
உயிர் தேய்கிறது
உயர்வு மட்டும்
எட்டா உயரத்தில்!

--

பெ. விஜயலட்சுமி
காஞ்சிபுரம்
6380704001

# நெஞ்சு பொறுக்குதில்லையே



மன்னனுக்கேற்ற மக்களா
மக்களுக்கேற்ற மன்னனா
மரத்துப்போகிறது மனது இந்த
மானங்கெட்ட
மதுபிரியர்களை நினைத்த
மாத்திரத்தில்

ஊரடங்கு
உள்ளடங்கு எல்லாம்
காற்றிலடங்க
தோற்று நோயின்
கரம்பற்றி
மதுவெனும்
மரண போதையில்
வீழ்ந்து போகும்
விட்டில் பூச்சிகள்

குடியும் வரியும்
வருமானமாய்
வரித்திடும்
கொள்ளையும் ஊழலுமே
கொண்டாடும்
கொல்லைப்புறமாய் வந்த
கொலைகார ஆளுங்கட்சி

பின்வாசலில்
சாராயத்தொழிற்சாலை
சாவகாசமாய்
திறந்து வைத்து
முன்வாசலில்
மதுக்கடையை மூடு
கோஷமிடும்
நாளும் வேஷமிடும்
எதிர்க்கட்சி

ஊழலை வெறுத்திடும்
காவேரியை காத்திட
போராடும்
மகளீர் வாழ்க்கையில்
மண்போடும்
மது கடைகளையும்
மது ஆலைகளையும்
முற்றிலும்
மூடிட துடிக்கும்
போராளிகளை
அலட்சியமாய் கடந்து செல்லும்
உண்மைக்கும்
போலிக்கும்
வேற்றுமை அறியா
மூட மாந்தர்கள்

வள்ளுவனும்
பாரதியும்
காமராஜரும்
கலாமும்
விவேகானந்தரும்
விளைத்திட்ட பூமிதாய்
மலடாய் தான் போனாளோ
ஐயகோ நெஞ்சு பொறுக்குதில்லையே
இந்த நிலைகெட்ட
மாந்தரை நினைக்கையிலே

--

**இளவரசி இளங்கோவன்**

# ஒரு ஏழையின் குரல்

உள்ளிருந்தால்
பசியெனும் நோய்க்கு பலி...!!
வெளிவந்தால்
கொரோனாவுக்கு பலி...!!

யார்மேல் சொல்வது பழி...!!

அரசாங்கமே...!!
அரசாங்கமே...!!

இந்தியாவில்
அம்பானிகளும்...
அதானிகளும்....
மல்லையாக்களும்...
நீரவ் மோடிகளும்....
மட்டும் வாழவில்லை...!!

தினப்பசிக்கு
தினக்கூலி செல்பவர்கள்
இன்னமும் வீழவில்லை...!!

பசிக்கு அழும் குழந்தையுண்டு
பால் இல்லை....!!
தவிக்கும் தாகமுண்டு
தண்ணீரில்லை...!!
பசியுண்டு உணவில்லை...!!
தேவையுண்டு பணமில்லை..!!
கூப்பிட குரல் உண்டு...!!
வந்துப் பார்க்கத்தான் யாருமில்லை...!!

வீடு இருந்தால் ஊரடங்கு...!!
வீடே இல்லையென்றால்...???

சட்டம் சாமானியனுக்கும்
என்பதெல்லாம் சரி...!!
திட்டம் என்பது ஒவ்வொரு
குடிமகனின் வரி...!!

அரசாங்கமே...!!

உயிர்கள் இங்கு போவதற்குள்
இனியேனும் வந்து
எங்களை கண்டுகொள்...!!

அல்லது
கண்டு கொல்...!!

கொரோனாவே..!!
கொரோனாவே..!!

உனக்கேனும் இரக்கமிருந்தால்
எங்களை வந்து கொல்...!!

# விவசாயி

மனிதா
இனியேனும் புரிந்துகொள்....!!

விவசாயம் என்பது
மண்ணுக்கு உரமிடுவது என்பதல்ல...!!
மனித உயிர்களுக்கு
உரமிடுவது....!!

ஆடம்பரம் எல்லாம் அதிவேகமாய்
முடக்கம்...!!
அடி வயிற்றுப் பசிமட்டும்தான் உயிரின்
தொடக்கம்....!!

மூன்று வேளை பசியிருக்கும் மட்டும்
விவசாயம் தேவை....!!
உலகில் உயிர்கள் வாழ்கிறதென்றால்....
அது விவசாயின் சேவை....!!

--
வி.முத்துக்குமார்

# எதற்காக வந்தாய்?

பரண்மேல் பதுங்கி
கிடந்த பல்லாங்குழியை
காட்டிக் கொடுக்கவா?
மூனும் மூனும் ஆறு
என்று ஆசனுக்கு முன்பே
பயில்வித்த பகடையை
பார்க்கவா?

கணினியில் கட்டி கிடந்த
என் வீட்டு கன்றுகளுக்கு
கண்ணாம்பூச்சி சொல்லித்தரவா?
அஞ்சறைப்பெட்டி அறியாத இளம்
அரவையருக்கு அடுப்பங்கரையை
காட்டவா?

பேச மறந்த பழங்கதைகளை
பேசி சிரிக்க வைக்கவா?
வெளிநாட்டு வாழ்க்கை வேண்டாம்
என்று சொல்லவா?
சத்தம் போட்ட வாகனங்களை
ஸ்தம்பிக்க செய்யவா?
சுத்தம் என்பது
சோறுபோடும் என
சொல்லித்தரவா?

வணக்கம் என்பதை வழக்கமாக்கவா?
சொல், கோரனா எதற்காக வந்தாய்?
இதற்காகத்தான் வந்தாயோ?

ஆனால் ஒன்றை மறவாதே,
ஒருவேளை கொன்று புதைக்க
வந்திருந்தால் எந்நாடு உன்னை
வென்று ஜெயித்துவிடும்
என்பதை!!!!

-- தர்ஷினி நாகூரான்



மாயா முரளி
Indooroopilly state school,
Brisbane

# மாண்டு போகும் மனிதம்

போராட்டம்!
இறப்பதற்கு முன்
கொரோனாக் கிருமியோடு
இறந்த பின்
மனித நச்சுக் கிருமிகளோடு

மருத்துவரை
புதைக்கக் கூடாதென
இங்கே
பிணங்களெல்லாம்
போராடுகின்றன

ரணங்களை
ஆற்றியவனுக்கு
இறுதி அஞ்சலியில்
ஆறாத ரணம்!

இங்கே
தீண்டத் தகாதது
பிணமா
மனிதர்களா?

அன்று
உள்ளங்கைகளைத் தட்டியவர்களே!
கொஞ்சம்
உள்ளங்களைத் தட்டுங்கள்!

நீ
எறிந்த கல் இருப்பது
உன் இதயத்தில் அல்லவா!
மூளைக்குள் சூழ்ந்திருக்கிறது
சுயநலக் கிருமி!

இவர்களுக்கு
அறுவை சிகிச்சை
தேவயில்லை
அறிவு சிகிச்சையே
தேவை!

இங்கே
சில கலவரக்காரர்களும்
அடிபட்டிருக்கலாம்
மருத்துவரே!
தயவுசெய்து எழுந்துவிடாதீர்கள்!
இவை
உயிருள்ள மனிதப் பிணங்கள்!

ஆறடி நிலத்தில்
புதைக்க விடாமல் தடுத்தவர்களே!
அவர்
ஆறு கோடி இதயத்தில்
விதைக்கப்பட்டிருக்கிறார்

நாற்பது கண்கள்
சிந்திய
கண்ணீர் அஞ்சலி
இன்று
பன்னிரு கோடி கண்களில்!

தோற்றது
கொரோனா கிருமி!
மனிதனே
இவ்வுலகில்
கொடிய கிருமி!

யாருக்காக
போராடினானோ
அவர்களாலேயே
கல்லடி
போராளிக்கு
கல்லடிகளும்
பூமாலைகள் தான்!

துரோகியே!
சுயநல முகமூடியை
கிழித்தெறி!

உயிருள்ள சவத்திற்கு
சுயநலத் தீ
இட்டுக் கொள்பவனே!
மனிதத்தை மலரவிடு
அறிவுத் தீபத்தை ஏற்று!

**சா.கா.பாரதி ராஜா,**
38-3, கைலாசநாதர் கோயில் தெரு,
பெரிய நத்தம்,
செங்கல்பட்டு. 603002.
9944315732, 8610078040

---



**கரண் கார்த்தி,**
முல்லை நகர், மன்னார்குடி

# தமிழகத்தில் மது வரலாறு...


செந்தில் பக்கிரிசாமி
மன்னை

வரலாற்றுக் காலத்திலும், இதிகாச காலங்களிலும் மது பலவகை பானங்களாக இருந்து வந்திருக்கிறது. ஒரு காலத்தில் மனிதன் மகிழ்ச்சிக்காக அருந்திய மது, பின்னர் அரசுகள் தோன்றிய பின் அதற்கான வருவாய் ஊற்றாக மாறியது.

ஆங்கிலேய அரசின் கீழ் இருந்த மெட்ராஸ் மாகாணம் காங்கிரஸ் கட்சி ராஜகோபாலாச்சாரியின் ஆளுகையில் வந்தபோது 1937ல் சேலம் மாவட்டத்தில் மட்டும் மது விலக்கு அறிவிக்கப்பட்டது. பின்னர் 1948ல் இருந்து தமிழகம் முழுதும் மதுவிலக்கு  பின்பற்றப்பட்டது. இது தொடர்ந்து தி.மு.க ஆட்சியை கைப்பற்றிய காலம் வரை தமிழ்நாடு முழுவதும் மது விலக்கு அமலில் இருந்தது.

1967 ல் ஆட்சியை திமுக ஆட்சியை பிடித்த போது நாட்டின் நிதி வசூலை பெருக்க அப்போதைய முதல்வர் அண்ணாதுரை தேர்ந்தெடுத்த பாதை சூது மதுவை புறக்கணித்தார்.

ஆனால் அண்ணாவின் மறைவிற்கு பிறகு கருணாநிதி முதல்வரான பின் 1971 ல் மது விலக்கை ரத்து செய்ய முன்வந்த ராஜகோபாலாச்சாரி அதனை தடுக்க முயன்றபோது தான், கருணாநிதி சொன்னார், ‘‘இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களில் சாராயக்கடைகள் நடக்கின்றன. நான் கையில் கற்பூரம் வைத்திருக்கிறேன், சுற்றிலும் நெருப்பு எரிகிறது. எப்படி காப்பது? இந்தியா முழுவதும் விலக்கு வரும் பொழுது நாமும் அனுசரிப்போம்‘‘ என்று கூறி சாராயக்கடை, கள்ளுக்கடைகளை திறந்து விட்டார்.

இதில் மது ஆலைக்கு உரிமம்  கொடுத்த  விஷயத்தில் பல ஊழல்கள் நடந்த காரணத்தால் பெரும் பிரச்சினையாகி மீண்டும் 1974ல் மது விலக்கு கொண்டு வரப்பட்டது. இது 1980 வரை தொடர்ந்தது.

பின்னர் எம்.ஜி.ஆர். அரசியலுக்கு  வந்த போது மது விலக்கை கொண்டு வருவேன் என பிரச்சாரங்களில் வாக்குறுதி கொடுத்தார். அதன் படி அவர் 1977ல் ஆட்சியை பிடித்த முதல் நான்கு வருடங்கள் அதை கடைப்பிடித்தார். ஆனால் கள்ளசாராயம் பெருகி விடுவதை தவிர்க்க  1981ல் அதிகாரப்பூர்வமாக  சாராயக்கடை, கள்ளுக்கடைகளை திறக்க அனுமதி வழங்கினார்.

கள்ளுக் கடைகளும் சாராயக் கடைகளும் ஏலம் விடப்பட்டன. சாராய உற்பத்தியில் தனியார் ஈடுபடுத்தப்பட்டனர். மது தங்குதடையின்றி ஓடிக்கொண்டிருந்த  காலத்தில், 1982 - 83 காலகட்டத்தில் IMFL என்ற ( Indian Made Foreign Liquors) பெயரில் மது

உற்பத்தி செய்யும் உரிமையை தனியாருக்கு வழங்கினார்.

பின் 1983ல் தான் TASMAC (tamilnadu state marketing corporation) உருவானது. அதாவது மாநிலத்தின் மொத்த மது விற்பனையையும் அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. அதாவது மது தனியார் ஆலையில் தயாரிக்கப்படும். அரசு அனைத்தையும் கொள்முதல் செய்யும். பின் மீண்டும் அதை தனியார் கடைகளுக்கு ஏலம் முறையில் விற்கும். இந்த முறை எம்ஜிஆர் ஆட்சி வரை இருந்தது.

அவர் இறந்த பின்னர் 1989 ல் கருணாநிதி தலைமையில் ஆட்சியை பிடித்த திமுக இதில் மேலும் சில மாற்றங்கள் கொண்டு வந்தது.

TASMAC ஐ கலைத்து விட்டு, TASCO (tamilnadu sprit corporation) என்று அமைப்பை ஏற்படுத்தி IMFL (Indian Made Foreign Liquors) சரக்குகளை அரசே உற்பத்தி செய்து தனியார் கடைகளுக்கு விற்பனை செய்தது. ஆனால் கலப்பட சாராயத்தால் பெரிய எண்ணிக்கையில் உயிர்பலி ஏற்பட்டதால் 1990ல் tascoவை இதை அரசு கைவிட்டது. பின் மீண்டும் கள், சாராயம் போன்ற நாட்டு சரக்குகளை அனுமதித்தது. அப்போது தான் மலிவு விலை சாராயம் என்ற பாக்கெட் சாராயம் அப்போது தான் விற்பனை செய்யப்பட்டன.

மீண்டும் அ.தி.மு.க.. ஆட்சி ஜெ.ஜெ. தலைமையில் 1991ல் அமைந்தவுடன் அவர் தேர்தல் வாக்குறுதியில் குறிப்பிட்டது போலவே பாக்கெட் சாராயத்தை தடை செய்தார். IMFL சரக்குகள் மட்டும் தனியார் கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டன. அரசு மதுவை தயாரிப்பதும் இல்லை. கொள்முதல் செய்யவும் இல்லை. கடைகளை நடத்த அனுமதி மட்டும் ஏலம் அடிப்படையில் வழங்கியது. இதற்கு மதுக்கடைகளை நடத்த ஏலம் எடுக்க தனியார் முதலாளிகள் மத்தியில் கடும் போட்டி நடந்தது. இதில் கட்சிக்காரர்களே பெரும்பாலும் பலன் அடைந்தார்கள். இது 12 வருடங்கள் தொடர்ந்தது.

பின் ஒரு வழியாக 2003 ல் அதிமுக ஆட்சியில் TASMAC மீண்டும் தொடங்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதிலும் விடப்பட்டிருந்த தனியார் உரிமம் ரத்து செய்யபட்டு, முதன் முதலாக அரசே மதுவை கொள்முதல் செய்து நேரடியாக விற்பனை செய்தது. எம்ஜிஆர் காலத்தில் இருந்த முறையில் கொள்முதலுக்கும் நேரடி விற்பனைக்கும் இடையில் உள்ள லாப வேறுபாட்டை நீக்கி அரசிற்கு லாபத்தை பெருக்க, TASMACக்கின் கீழ் 7000 கடைகள் திறக்கப்பட்டு அரசே மது விற்பனையை இன்று வரை செய்து வருகிறது. ஆளும் கட்சிக்கு ஆதரவான ஆலைகளில் இருந்து tasmac-க்கிற்கு சரக்கு கொள்முதல் செய்யப்பட்டது. அரசின் வருமானம் பாதிக்கப்பட கூடாது என்ற நோக்கில் அதுவரை கிராமங்களில் விற்பனை ஆகிக்கொண்டு இருந்த கள் விற்பனையை முழுமையாக அரசு தடை செய்தது.

அப்போதைய  எதிர்கட்சி திமுக இந்த டாஸ்மாக் மது விற்பனையையும், அதற்கு சரக்குகள் வழங்கும் அதிமுக ஆதரவு மிடாஸ் ஆலையையும் கடுமையாக எதிர்த்தது. அரசே மது விற்பனை செய்வதா என தேர்தலின் போது கடுமையாக விமர்சித்தது. ஆனால் ஆட்சிக்கு வந்த உடன் அதில் உள்ள வருமானத்தை பார்த்து வியந்து அதை அப்படியே திமுக தொடர்ந்தது.

அதே நேரத்தில் டாஸ்மாக் கடைகளுக்கு சரக்கு கொள்முதல் செய்ய தாங்களே தங்கள் கட்சிக்காரர்கள் தயவோடு சில ஆலைகளை நிறுவ அனுமதி கொடுத்தார்கள்.

இது இன்று வரை மாறி மாறி தொடர்கிறது.

ஆனால் இன்று இந்த இரண்டு கட்சிகளும்  மது விற்பனை  விஷயத்தில் ஒருவரையொருவர் கடிந்து கொள்வது போல பாசாங்கு செய்கின்றனர்...

தமிழ்நாட்டில் TASMAC  கடைகளின் மூலம் விற்பனை செய்யப்படும் மதுவில் அதிமுக, திமுக வினருக்கு  நேரடியாகவும், மறைமுகமாவும் சொந்தமான சாராய உற்பத்தி ஆலைகளில் இருந்தே வாங்கப்படுகிறது.

பல ஆயிரக்கணக்கான கோடிகளை அந்த உற்பத்தியாளர்கள் ஆண்டுதோறும் சம்பாதித்து வருகின்றனர்...

தமிழக அரசின் வருமானம் மது விற்பனை மூலம் கடந்த ஆண்டு சுமார் ரூ31, 750 கோடி. கொரனா நிவாரணத்திற்கு மத்திய அரசு போதிய நிதி வழங்கவில்லை எனவே கடைகளை திறக்கிறோம் என்கிறார் எடப்பாடி. மத்திய அரசை வலியுறுத்தி  நிதியை வாங்க முடியாத அரசு, தன்மக்களை காவு வாங்குகிறது...

இப்படியாக இந்த மது விற்பனை நிதியால் நம் அரசு என்ன சாதித்து விட்டது??

தமிழக மொத்த கடன் 3.5 லட்சம் கோடிக்கும் மேல்.

பேரிடர் சமயத்தில் மக்களுக்கு போதுமான நிதியை வழங்க முடியவில்லை.

சரியான உள் கட்டமைப்பு, நீர் மேலாண்மை, குப்பை மேலாண்மை, கழிவு மேலாண்மை, வடி கால் வசதி, தரமான கல்வி, மருத்துவம், சுகாதாரம், போக்குவரத்து, சரியான மின் கட்டமைப்பு என  அனைத்திலும் பின் தங்கியே உள்ளோம்....

அப்படி என்னதான் சாதித்து விட்டீர்கள்..

எந்த பொருளாதார மேம்பாடும் தெரியாமல் அதை தெரிந்து கொள்ளும் எண்ணமும் இல்லாமல் வெறும் சாராய விற்பனையை மட்டுமே நம்பி ஒரு அரசாங்கம் செயல்படுவது சமூகத்திற்கு பெரும் ஆபத்து.

மது விற்பனைக்கு மாற்றாக பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்த பொருளாதார நிபுணர்கள் பல யோசனைகளை சொல்லி வருகிறார்கள்.

அவற்றில் சிலவற்றை பார்ப்போம்.

1. பால் விற்பனை முழுதும் அரசே எடுத்து நிர்வகிப்பது,

தனியார் பால் நிறுவனங்களுக்கு அனுமதியை வழங்காமல் பால் விற்பனையை முழுக்க முழுக்க அரசே எடுத்து நடத்தலாம்..

2. கனிம வளம்

இன்று மணல் தேவை, விற்பனை என்பது பெரிய அளவில் உள்ளது. மணல் விலையும் மிக அதிகமாக உள்ளது. இதுல மணல் கொள்ளை வேறு.

ஒரு ஆற்றில் இருந்து ஒரு யூனிட் மண் எடுக்க அரசு உதாரணமாக 1300 ரூ வரை நிதி வசூலிக்கிறது என்று வைத்து கொள்வோம். அந்த ஒரு யூனிட் மண் கரைக்கு வந்தால் அதன் விலை 3000ரூ ஆகும். அதுவே வீட்டுக்கு வந்தால் 7000ரூ என்று வைத்து கொள்வோம். மக்கள் ஒரு யூனிட் மண்ணுக்கு செலவு செய்வது 7000ரூ. ஆனால் அரசுக்கு வருவாய் வெறும் 1300 ரூ. மீதி 6000 ரூ யாருக்கு செல்கிறது? யார் யாரோ மணலை வைத்து பெரும் கோடீஸ்வரர்கள் ஆகின்றனர். ஆனால் அரசு அதை செய்ய கூடாதா? அரசே மணலை நேரடி விற்பனையில் இறங்கலாம். onlineல பணம் கட்டி பதிவு செய்தவர்களுக்கு நியாயமான விலையில் வீடுகளுக்கு மணலை கொடுக்கலாம். இதன் மூலம் வருவாய் முழுதும் அரசிற்கே செல்லும். இது போல மற்ற கனிம வளங்களையும் அரசே நேரடி விற்பனை செய்ய வேண்டும். எப்படி மதுவை நேரடி விற்பனை செய்கிறார்களோ அப்படி.

3. பதிவு அலுவலகங்களில் முத்திரைத் தாள்களை முறையாக விற்பனை செய்வதும், ஆவண எழுத்தாளர்கள் என்ற பெயரில் உள்ள உள்ள உள்ள தரகர்கள் ஆவண உருவாக்கத்திற்கு கமிஷன் என்ற பெயரில் பெயரில் பல ஆயிரம் வசூலிப்பத்தையும் தடுத்து நிறுத்தி, அரசே அந்த வேலையை செய்யும் பொழுது மிக நியாயமான விலையில் மக்களுக்கு கொடுக்க முடியும். அதே நேரத்தில் அரசுக்கும் வருமானம் பெருகும். இதேபோல பல அரசு அலுவலகங்களில் இடைத்தரகர்கள் செய்யும் வேலையை முறையாக அரசே செய்து அதன் லாபத்தை பெற முடியும். குறிப்பாக சாலை போக்குவரத்து அலுவலகத்தில் உரிமம் பெறுவது.

4. நாடு முழுவதும் ஓடும் ola, uber போன்ற போக்குவரத்துகளை அரசே எடுத்து நடத்த வேண்டும். அரசு இணையதளங்களில் மட்டுமே பதிவு செய்து நாம் போகும்படி வைக்க வேண்டும். இப்படி செய்வதால் அரசுக்கு நல்ல ஒரு கமிஷன் கிடைக்கும்.

5. மக்கள் திரைப்படங்களைப் பார்ப்பதற்கு இணையதளங்களில் பதிவு செய்கின்றார்கள். அதில் just tickets, book my show போன்ற இடைத்தரகர்கள் பெருமளவு சம்பாதிக்கிறார்கள். அதற்கு தமிழகத்தில் உள்ள அனைத்து திரையரங்குகளையும் அரசின் இணையதளத்தில் வைத்து மட்டுமே பதிவு செய்ய முடியும் என்ற நிலைக்கு கொண்டு வந்து அதில் பதிவு கட்டணம் மற்றும் மாநில மத்திய அரசு வரியையும் எடுத்துக்கொள்ளலாம். இதில் கூட கணிசமான லாபம் கிடைக்கும்.

இன்னும் எண்ணற்ற வழிகள் உள்ளன. அவற்றை பற்றி தனியாக வேறு ஒரு கட்டுரையில் பார்ப்போம்.

ஆனால் இவற்றை எல்லாம் பரிசோதித்து பார்க்கும் எண்ணம் கூட இல்லாமல் முழுக்க முழுக்க தன் சுய நலத்திற்காக மட்டுமே பண வெறி கொண்டு மக்களிடம் குடி வெறியை திணிக்கிறது அரசுகள்.

**‘‘குடி உயர கோன் உயரும்’’ என்பார்கள்.**

அதன் பொருளை தவறாக புரிந்து கொண்டார்கள் போல..

--

மன்னை செந்தில் பக்கிரிசாமி

# உறக்கம் கொள் என் தேவதையே ...

நாடுகள் கடந்து பரந்த உன் சிறககுள்
இளைப்பாறட்டும் ...

வானங்களோடு அளவீடு செய்யும் உன் ஆற்றல்கள்
புத்துணர்வு பெறட்டும் ...

விழிகளுக்கு இமைகளுக்கு நடுவே புது
காதல் பிறக்கட்டும்

அசைவுறாது நிற்கும் உன் உதடுகள் உச்சரிக்காத புது
வார்த்தைகள்
உரு பெற்றுவரட்டும்

நெஞ்சணைத்தவாறு நீ உறங்கும்  சில நூல்களின்
எழுத்துக்கள்
உன்னுள் ஊடுருவட்டும்

உடேலெல்லாம் ஓடும் செங்குருதி,
அவை தொட்டு உறவாடும் உன் நரம்புகள்,
எலும்போடு சதையும் ,
உயிரோடு உடலும்,
பிறக்கட்டும் புதிதாய்;
உன் சிற்றுறக்கத்திற்கு பின்,

உறக்கம் கொள் தேவதையே ....

--

எதினா வின்செனட்

# எல்லாம் சில காலமே

யாரும் எதிர்பாராத நாட்கள் !
யாரும் எதிர்க்க முடியாத நாட்கள் !

சாலைகள் எல்லாம் அமைதியாய்
உறங்கி போயின !
விபத்துக்கள் குறைந்துவிட்டது!
மருத்துவமனையில் குவியும் கூட்டம்
இல்லை!
மருந்துகள் இல்லாத வாழ்க்கை
இனிக்கிறது!

யானைகளும் மான்களும் தனது பழைய
இருப்பிடத்தை தேடி தேசிய
நெடுஞ்சாலையில் அலைகின்றன!
விளம்பர பேனர்கள் இல்லை!
தியேட்டர் ஆரவாரம் இல்லை
ரசிகர்கள் அலப்பறை இல்லை!
ஓடி ஓடி பறந்த வண்டிகள் ஓரமாய்
ஓய்வெடுக்கின்றன!

எனினும்.....
பறவைகள் எல்லாம் பயந்து
கூட்டுக்குள் இருக்கும் போது
சில சிட்டுக்குருவிகள் உலா வந்து
காவல் பருந்துகளிடம் மாட்டிக்
கொள்கின்றன!

வீரம் கொண்ட இளைஞர் கூட்டமும்
வீட்டுக்குள்ளே முடக்கம்!
இருபது வருடம் கழித்து இப்போதுதான்
தாய் மடியில் தலை சாய்த்துக்
கொண்டனர்!
குழந்தைகள் குதித்து விளையாட
நானும் குனிந்துக் கொள்ள நேரம்
கிடைத்தது!

இரவில் நிலாவை காட்டி சோறு ஊட்ட
நேரம் கிடைத்தது!

இன்னும் சில நாட்கள் தொடரும் எனில்

இன்பம் துன்பம் கலந்து வரும்
வாழ்க்கை இனிது!

--

பழ. தமிழன் சின்னா
புதுக்கோட்டை
6383698728



க. பிரியதர்சனி
வடுவூர்

# காத்திருப்பு



சுபஸ்ரீ விஸ்வலிங்கம்

பத்து மாதம் காத்திருந்தோம்,
வாழவிருக்கும் பிரபஞ்சத்தை காண..

மழலை பருவம் முழுவதும் காத்திருந்தோம்,
பள்ளிக்கூட காற்றை சுவாசிக்க..

பள்ளிபருவத்தின் கடைசி இரண்டாண்டுகள்
ஆர்வமாய் காத்திருந்தோம்,
கல்லூரி கனவை நனவாக்க..

அதை தொடர்ந்து பல மாதங்கள்
காத்திருந்தும்,
படிப்பிற்கேற்ற பணியை கைபிடிக்க..

இளமை பருவத்தின் முக்கால்வாசி காலமும்
காத்திருந்தோம்,
வாழ்க்கை துணை கரம் பற்றிட..

மீண்டும் அதே பத்துமாத காலம் காத்திருந்தோம்,
நாம் உருவாக்கிய உயிரை தொட்டணைக்க..

ஒரு குறிப்பிட்ட காலத்திற்க்கு பிறகு எப்பாடு பட்டோ வாழ்ந்துவிட்டோம் என்ற
நிம்மதியோடு காத்திருப்போம் மரணம் தீண்டிட..

இவ்வாறு ஒவ்வொரு காத்திருப்புகளும் ஒரு மேம்பாட்டை பரிசாக
வழங்குகையில், தற்போது நாம் பல வேதனைகளோடு கொண்டிருக்கும் இந்த
காத்திருப்பும் நிச்சயம் ஒரு விடியலுக்கு நல்வரவை தரும் என்ற
நம்பிக்கையோடு என்றும் நான்..

# காந்தியத்தில் உதிர்ந்த தியாக பூவே



இராசையா பெற்ற
ஆசை புதல்வனே
ஊரெழுவில் உதித்த நீ
உறுதிக்கு மறுபெயராய்
உன் பெயரை
ஊருக்குரைத்தாய்!

பத்தாம் மாதத்தில் விதி
கொத்திப்போனது
உன் அன்னையை
அதனால் தானோ
அனைவரிடமும்
உனக்கு கிட்டா
அன்னையின்
கருணையையும்
பாசத்தையும்
அளவில்லாமல்
பொழிந்தாய் நீ!

படிப்பில் படுசுட்டியாம்
சதுரங்க புலியாம்
சிறப்பான சித்திகள்
பெற்ற போதும்
மண்ணையும் மக்களையும்
காக்கும் மாவீரத்திற்கு
மனம் கொடுத்தாய்
மருத்துவ படிப்புக்கு
முற்றுப்புள்ளி வைத்தாய்

எப்போதும் சிரித்த முகம்
கடுமையை காட்டிடாத
கருணை முகமாம்
இரும்புக்கும் மேலான
உறுதி இதயம் கொண்ட
பொலிவு மிக்க
உன் குழந்தை முகம்
ஆம் அசாதாரண மனிதர்கள்
எப்போதும் அப்படித்தான்

ஆயுதங்கள் ஏந்தியவர்கள்
அகிம்சை வழி நின்றால்
கேள்விக்கு விடை
சாவை தொட்டபிறகும்
சாங்கித்தியமென
சொட்டு தண்ணீரும்
என் வாயில் விட்டு
விடக்கூடாதென
சளைக்காமல் நீ
வாங்கிய உன் சத்தியம்
சத்தமில்லாமல்
சொல்லிப்போகிறது

சதுரங்கப்புலியான நீ
அரசியல் பிரிவு

செயலாளராகி
காய்கள் பல நகர்த்தி
எதிரிக்கு ஆட்டமும்
தன் உயிர் மக்களுக்கு
நலத்திட்ட குழுக்கள்
பல அமைத்து
நன்மைகள் பல புரிந்து
உயிரோட்டமும் தந்து
நம்பிக்கை பூக்களை
பூக்கவைத்தாய்

அல்லும் பகலும்
அயராது அன்னை மண்ணுக்கு
உழைத்திட்ட நீ அணிந்த ஒரு
உடையையும் அடுத்தநாள் அணிந்திட
அர்த்த நிசியானாலும் அலசி போட்டு
படுக்கும் நீ  ஒரு எளிமையின் சிகரமே

ஐந்தம்ச கோரிக்கைகள்
வலியுறுத்தி அகிம்சை பூமிக்கு
அன்னை மண்ணின் வலி உணர்த்த
நினைத்த ஈழத்து காந்தியே
காந்தி மண்ணில்
அகிம்சை காலாவதியாகி
கனகாலம் ஆகிப் போனதையும்
அமைதி படையின்
ஆத்திரதாண்டவத்தையும்
ஆறாத்துன்பம் தந்த
உன் சாவுதானே
சவுக்கடியாய்
உள்ளூர உணரவைத்தது

பதினாலு அங்குலம்
பயமின்றி உன் குடலை
பங்கு கொடுத்தும்
பற்றாமல் படிப்படியாய்
பதட்டமில்லாமல்
மரணத்தை ஏற்று
தமிழினம் தரணியில்
தழைக்கும் மட்டும்
தங்கள் இதயத்தில்
உன்னை வைக்க
மரணமே இல்லா
மார்கண்டேயனாக
மகுடம் சூட்டி கொண்டாய்

அகிம்சையின் தந்தை
அண்ணலே ஆகாரமாய்
நீரையருந்தித்தான்
அறவழி சென்றார்
ஆனால் நீரோ
ஒரு துளியும் நீரையருந்தாமல்
அகிம்சைக்கு புது
ஆரம் சேர்த்தாய்

உண்ணாவிரமிருந்து
உறுதிக்கு பதில்
உன் நாமம்
வரலாற்றில்
அழியாச்சுவடாய்
வரைந்து சென்றாய்

பூமியும் வானமும்
காற்றும் கடலும்
சூரியனும் தமிழினமும்
உள்ள மட்டும் நீ வாழ்ந்து வருவாய்
ஆயுதமேந்திய அஞ்ச நெஞ்சனே
காந்தியத்தில் உதிர்ந்த
தியாக பூவே
தலை வணங்கி
கண்ணீர் பூக்களால்
மானசீகமாய் உன்
மலரடி போற்றுகின்றேன்

– இளவரசி இளங்கோவன்

# ரே ப்ராட்பரியின் ஃபாரென்ஹீட் 451
## (ஒரு வாசிப்பு அனுபவம்)

’தீ வைத்து எரிப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது.’ - இப்படிதான் ஃபாரென்ஹீட் 451 நாவலின் முதல் வரி முதல் சொல் தொடங்குகிறது. இதிலிருந்து இந்த நாவல் காட்டுகிற உலகம் நாம் வாழும் இதே பூமியின் எதிர்கால மக்களின் செயல்பாடுகள், அங்கே வாழும் முறை குறித்த புனைவு. இது கடந்த நூற்றாண்டின் சிறந்த புனைவுகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இது வெளியான பிறகு இதை தடை செய்திருக்கிறார்கள். பெரிய போராட்டம் செய்து இந்த நாவலைக் கொண்டு வந்திருக்கிறார்கள். உலக அரங்கில் இந்த நாவல் பலரையும் பயங்கொள்ள வைத்திருக்கிறது.

இந்த நூலை நான் முதலில் படிக்க ஆரம்பித்தபோது என்னால் ஆழ்ந்து படிக்க முடியவில்லை. கதைக்குள்ளே போக முடியாமல் திணறினேன். ஆனால் எல்லா நூலும் நம்மை சல்லென அழைத்து செல்லாது என்று புரிந்துக் கொண்டேன். ஆகவே தொடர்ந்து என்னை வற்புறுத்திக்கொண்டு படித்தேன்.

ரே ப்ராட்பரியின் இந்த புனைவுலத்தில் முதலில் என்னால் புகுந்து பார்க்க முடியாமல் போனது. எனக்கு கடினமாக இருந்தது. அவர் கட்டமைக்கும் உலகம் எனக்கு புதிதாக இருந்தது. பல இடங்களில் நாவல் வர்ணனைகள் எனக்கு புரியாமல் போனது. அது தொடர்ந்து நடக்கவே, இந்த நூலைத் தவிர்த்துவிட்டு வேறு நூலுக்கு தாவிவிடலாமா என்று யோசித்தேன். இருப்பினும் என்னைக் கட்டாயப் படுத்திக் கொண்டு இந்த நூலைப் படித்தேன். இதுவரை நான் படித்த நூல்களில் இதுதான் நான் கடினப்பட்டு படித்த நூல். இந்த நாவலின் தன்மையா அல்லது மொழிபெயர்ப்பின் ஒரு வார்த்தையைக்கூட விடாமல் தமிழாக்கம் செய்ய வேண்டும் என்று செய்ததா.? தெரியவில்லை. ஆனால் படிக்க படிக்க நூலை விட முடியவில்லை.! காரணம், இந்த நாவலின் புனைவுலகம் அப்படி. அதை முழுதாக பார்க்க வேண்டும் என்றுதான். வாசித்த பிறகு அதைப்பற்றி எழுதாமல் இருக்க முடியவில்லை.

ரே ப்ராட்பரியின் புனைவுலகம், ஆங்கில இலக்கியத்திலிருந்து உலக வெளிக்கு வந்த இலக்கிய வகைமைகளுள் உட்டோப்பியன் மற்றும் டிஸ்டோப்பியன் ஆகியன மிக முக்கியமானது. அமெரிக்க இலக்கிய உலகம் இதனை நன்கு பயன்படுத்திக் கொண்டது என்றுதான் சொல்லவேண்டும். ரே ப்ராட்பரி எழுதிய ஃபாரென்ஹீட் 451 ஒரு டிஸ்டோப்பியன் நாவல்.

நாவலின் கதைக்களம் 2050களுக்கு  பின் நடைபெறுகிறது என்று படிக்கும்போது

நமக்கு தெரிய வருகிறது. நூல்கள், கொண்டாட்டங்கள், கூடுகைகள், படங்கள், நிகழ்ச்சிகள் என பலவும் இல்லாத ஒரு புனைவான உலகத்தை ப்ராட்பரி உருவாக்கி அதில் நம்மை நடமாட விடுகிறார். நூல் வைத்திருந்தால் தீயணைக்கும் படை 451ற்கு எச்சரிக்கை மணி ஒலிக்கும். உடனே தீயணைப்பவர்கள் ஓடிப்போய் தீமூட்டி நூல்களை எரித்து சாம்பலாக்குவார்கள். இதை ஒரு சட்ட நடவடிக்கையாகவும் ஃபாரென்ஹீட் 451 துறையின் விதிகளாகவும் கொண்டிருக்கும் உலகம் அது.

இந்த நாவலின் அடி நாதம் இதுதான் : அங்கு புத்தகம் வாசிப்பதும் வைத்திருப்பதும் சட்டபடி குற்றம். வாசிப்பதைக் கேட்டால்கூட தண்டனைதான். புத்தகங்கள் வைத்திருந்தால் அதைக் கண்டுபிடித்து எரித்துவிட வேண்டும். வைத்திருந்தவரைத் தண்டிக்க வேண்டும். இதற்காக ஒரு படையே இருக்கிறது. அதில் பணியாற்றும் ஒரு தீமூட்டிதான் நாவலின் நாயகன், கை மோண்டாக். அவன் தன் பணியை செவ்வனே செய்து வரும்போது அவனுக்குள் எழும் கேள்விகளும் அவன் காணும் உலகமும் அவனை வேறுவிதமாக யோசிக்க வைத்து செயல்படத் தூண்டுகிறது.

அதன்படி கை மோண்டாக், ஒரு நூலை எதேச்சையாக வாசிக்கிறான். அதிலிருக்கும் சில வார்த்தைகள் அவனை என்னவோ செய்துவிடும். அவன் வாசிப்பைக் கைக் கொள்கிறான். ஆனால் சட்டபடி குற்றமாக இருப்பதை மறைத்து வைக்க முயன்று தோற்கிறான். மாட்டிக் கொண்டான் என நாம் நினைக்கும் நேரத்தில் தப்பிக்கிறான். எது அவனை உந்தியது.? ஏன் புத்தகங்கள் தடை செய்யப்பட்டுள்ளன.? மோண்டாக் என்ன ஆனான்.?

‘இது பிரமாதமான தொழில். திங்கட்கிழமை மில்லேவை எரிக்க வேண்டும். புதன்கிழமை விட்மன், வெள்ளிக்கிழமை ஃபாக்னர், என எல்லோரையும் எரித்து சாம்பலாக்கி, பின் சாம்பலை எரிக்க வேண்டும்.’ நாவலில் வரும் இந்த வரிகள் வியப்பைத் தருகின்றன. புத்தகங்களை எரிப்பதற்காக ஒரு படை உருவாக்கி ஆள் நிரப்பி சம்பளம் கொடுத்து நடத்துகிறார்கள். இவ்வளவு பெரிய கட்டமைப்பின் மீது க்ளாரிஸ் என்ற பெண் ஒரு சிறு கல்லை கேள்வியாய் எறிகிறாள்.’

முன்பொரு காலத்தில் தீயணைப்பவர்கள் தீ வைப்பதற்கு பதிலாகத் தீயை அணைத்தார்கள் என்பது உண்மையா.?’ என்ற கேள்வி மோண்டாகிடம் கேட்கப்பட்டவுடனே அவன் பதில் தெரியாமல் சமாளித்துக் கொள்வான். பதிலை சொல்லாமல் வேறொன்றைப் பேசுவான். தீயணைப்பவர்களின் பணி தீமூட்டுவது என்று நம்பிய ஒரு சமூகத்தை எழுத்தாளர் நமக்கு காட்டுகிறார். நம்மிடமிருந்து முற்றிலும் மாறுபட்ட, நம்முடைய எதிர்கால சமூகம், சிந்தனைகளை ஒடுக்கும் அதிகாரமும் சிந்தனைகளை ஒதுக்குகிற பண்பாடும் இருக்கும் சமூகம் என்பது ஒரு எச்சரிக்கையாக நமக்கு எழுத்தாளரால் இங்கே சொல்லப்படுகிறது. அதன் வீரியம் என்னவென்று அறிய வேண்டுமா.?

இதோ, நீங்கள் இந்த பத்தியைப் படித்துக்கொண்டிருக்கும் வேளையில் உங்களைக் கைது செய்து நீங்கள் எதில் இந்தப் பத்தியை படித்தீர்கள் என்று அறிந்து, அதை உடனே கொழுத்தி போட்டுவிட்டு படித்தது குற்றம் என்று சொன்னால் உங்களுக்கு எப்படி இருக்கும்..? யோசித்துப் பாருங்களேன்.!

நாவலின் மிக முக்கியமான ஒரு காட்சி: அதில் தீயணைப்பு படை ஒரு வயதான பெண்ணின் வீட்டில் வேட்டை நடத்தும்போது, வீட்டுக்குள்ளே அடுக்கடுக்காக ஏராளமான புத்தகங்கள் இருப்பதைக் கண்டு அனைவரும் ஆச்சர்யம் அடைகின்றனர். அவற்றையெல்லாம் ஓரிடத்தில் குவித்து மண்ணெண்ணெய் ஊற்றி நெருப்பைப் பற்ற வைக்க முற்படுகிறார்கள். ஆனால் அந்தப் பெண் தானே ஒரு தீக்குச்சியைப் கொழுத்தி பற்றவைத்துக் கொள்கிறார். மோண்டாக் அப்பெண்ணைக் காப்பாற்ற நினைத்து முற்படும்போது அனைவரும் அவனை இழுத்துப் பிடித்துக் கொள்கின்றனர். வன் கண் முன்னே புத்தகங்களோடு அப்பெண்ணும் எரிந்து போகிறார். பேரதிர்ச்சியில் உறைந்துபோன மனதுடன் அவன் தன் வீட்டிற்கு போனப்பின் காய்ச்சல் கண்டுவிடும்.

புத்தகங்களுக்காக தன் உயிரையும்கூட துச்சமாக தூக்கி எறிகிற அப்பெண்ணின் மரணம் அவனை உலுக்கி எடுக்கிறது. அவன் மனதிற்குள் புத்தகம் படிப்பது சரியா தவறா.? என்று போராட்டம் தொடங்குகிறது. இறுதியில் ஒரு சந்தர்பத்தில் அவன் புத்தகம் ஒன்றை வாசித்து பார்க்கிறான். புத்தகம் என்ற வடிவம் அதன் பரிமாணம் அதன் பொருள் எல்லாமே அவனுக்கு ஆச்சர்யமளிக்கிறது. அதை அனுபவித்தவனுக்கு அதை விட்டுக் கொடுக்க மனம் வரவில்லை. புத்தகத்தை விரும்பும் மனிதனாக அவன் மாறிவிட்டான். சட்டப்படி அது குற்றமானாலும் அவனுடைய மனதில் அது நியாயமானது என்று தோன்றியது. ஆக நியாயமானது எதுவோ அதை அவன் தேர்ந்தெடுக்கிறான். தன் மனைவி மில்ட்ரெடிடம் புத்தம் படிப்பது பற்றி இப்படி கூறுகிறான்.10' ஒவ்வொரு புத்தகத்துக்கும் பின்னல் ஒருவர் இருந்திருக்கிறார் என்று முதன்முறையாக உணர்நுதிருக்கிறேன். அவற்றைக் காகிதத்தில் பதிவு செய்ய அவருக்கு நீண்ட நேரம் தேவைப்பட்டிருக்கும்.'

'தன்னைச் சுற்றியுள்ள உலகத்தையும் வாழ்க்கையையும் கவனித்து பார்த்து, தன்னுடைய கருத்துகளை எழுத்தில் பதிவு செய்ய ஒருவேளை வாழ்நாள் முழுவதும் ஒருவருக்கு வேண்டியிருந்திருக்கும். இப்படியான வரிகள் நாவலில் இடம் பெற்றிருக்கின்றன. ஒரு நூலை நாம் எப்படி இன்று பார்க்கிறோம், அதையே எதிர்கால மனிதர்கள் எப்படி பார்க்கிறார்கள் என்றும், தொலைநோக்கு பார்வையுடன் கூறப்பட்ட அவதானிப்பு வரிகள் இவை. நூலைப் படிக்கையில் நமக்கு சிறிதளவேனும் அறிவு விரிவடையும். ஆனால் நூல்களையே தடைசெய்த ஒரு நாட்டில் இருப்பவர்களின் அறிவு எப்படி இருக்கும்.?

அப்படி ஒரு நிலை எதிர்கால சமூகத்தில் உருவாக வாய்ப்புகள் அதிகம். ஆகவே அங்கே நூல்களும் படங்களும் கேளிக்கைகளும் நிகழ்ச்சிகளும் தடைச் செய்யப்படுகின்றன.

அதை நோக்கி நாம் நகர்கிறோம் என்று சமூக விமர்சனத்தையும் எழுத்தாளர் வைக்கிறார். நாவலின் ஓரிடத்தில் மோண்டாக் மறைத்து வைத்திருக்கும் நூலைத்தேடி அவனது வீட்டிற்கு தீயணைப்பு படை அவனையும் அழைத்து கொண்டு வந்து விடும். நூல்களைக் கண்டுப்பிடித்து எரித்துவிடும். அவனது மனைவியே அவனைக் காட்டிக் கொடுத்திருப்பாள். அப்போது பியாட்டி என்ற குழுத் தலைவனை எந்திர தீமூட்டியால் எரித்து விடுவான் மோண்டாக். இந்த புள்ளியை மோண்டாக் என்பதைத் தாண்டி அறிவார்ந்த மக்களின் எதிர்வினையாக பார்க்கவேண்டும்.

புத்தகங்கள் என்பது அறிவின் திரட்டு. படித்தால் அறிவு பெறுகிறோம். அறிவு பெற்றால் கேள்வி கேட்போம். கேள்வி கேட்டால்தான் அரசதிகாரத்திற்கு பிடிக்காதே. கேள்விக் கேட்பதைத் தடுக்க அறிவை அழிக்க வேண்டும் என்று எண்ணி முட்டாள்தனம் செய்கிறது அரசதிகாரம்.

புத்தகத்தை தடை செய்திருக்கும் நாட்டில் மக்கள் புத்தகத்தை மறைத்து வைத்தேனும் படிக்கின்றனர். குற்றம் என்று சட்டம் சொன்னாலும் அதை ஏற்காமல் தங்களுக்கு தேவை என்று படிக்கின்றனர். மிக முக்கியமான விசயமே இதுதான். மக்களுக்கான அரசியல் சட்டங்களை ஆளும் வர்க்கம் என்றுமே ஏற்காது. ஆளும் வர்க்கம் ஆளுவதற்கு மக்கள் அறிவற்றவர்களாக இருக்க வேண்டும். ஆனால் சமூக வரலாறு வேறு.

உலக மக்களின் வரலாறு என்றைக்குமே மக்களை சரியாக பதிவு செய்வதில்லை. அதில் ஒரு துளி : அரசு எவ்வளவோ சட்டங்கள் போட்டிருந்தாலும் அரசு அதிகாரம் எவ்வளவு ஆழமாக இருந்தாலும் மக்கள் என்றும் அதிகாரத்திற்கும் மேற்பட்டவர்களாக இருந்துள்ளனர். அவர்களை அதிகாரங்களைக் கொண்டு எப்போதுமே அடக்கிவிட முடிவதில்லை. அதிகாரங்கள் மக்கள் நாயகத்திற்கு முன் எடுபடாமல் போய்விடுகிறது. அரசதிகாரங்களை மக்கள் அப்படியே ஏற்பதுமில்லை புறக்கணிப்பதுமில்லை. அரசதிகாரத்திற்கு அப்பாற்பட்டு தங்களுக்கான வாழ்க்கைமுறையை மக்கள் என்றுமே முன்னெடுத்திருக்கிறார்கள் என்பதுதான் உலக மக்களின் வரலாறாக இருந்து வந்துள்ளது. அரசதிகாரங்கள் அவர்கள் முன்பு காய்ந்த இலைப்போலத்தான்.!

எழுத்தாளரின் வர்ணனைகள் பல இடங்களில் கதையின் ஓட்டத்திற்கு சற்று வெளியே ஓடிப்போய்விட்டு  வருகிறது. அளவான கற்பனையா அதீதமா என்று தெரியாத அளவுக்கு இருக்கின்றன சில காட்சிகள். உதாரணத்திற்கு கடைசியில் காட்டில் வெடிகுண்டுகள் வெடிப்பதுபோல காட்சிகளும் அப்போது மோண்டாகின் மனைவி மில்ட்ரெடும் உடன் இருப்பதுபோல எழுதியுள்ளார். கற்பனைகள் நன்று. ஆனால் கதையின் ஓட்டத்தை நன்றாகவே பாதிக்கின்றது. இவரது மற்ற சில படைப்புகளும் இப்படிதான் இருக்கின்றன. உதாரணத்திற்கு கூடe Smile என்ற சிறுகதை படித்தால் கட்டுரைப் போலவே இருக்கும். அதன் கடைசி வரிகளில் கவித்துவமாக, நிலா நீலவானத்தில் நீந்திக் கொண்டிருந்தது என்று முடித்திருப்பார். இவ்வார்த்தைகள் இல்லையேல் இது கதையே இல்லை என்று சொல்லிவிடலாம்.

சுவர் தொலைக்காட்சி என்ற ஒரு காட்சிப்படுத்தல் வருகிறது. அதாவது பெரிய திரையுடன். அதில் நாடகங்கள் ஒளிபரப்பப்படும். அதில் இருவர் பேசிக் கொள்வார்கள். இடையில் மக்களில் ஒருவரிடம் எதாவது கேட்பார்கள். அவரும் மகிழ்வோடு தனக்கான ஒரு வசனத்தைப் பேசுவார். இது மட்டுமே அவர்களுக்கான ஒரே பொழுதுபோக்கு அம்சமாக இருக்கிறது. மோண்டாகின் மனைவி மில்ட்ரெட் அதையே உயிராக கொண்டிருக்கிறாள்.

மோண்டாக் எதாவது கேட்டான் என்றால் அவள் தொலைக்காட்சி நாடகத்தைப் பற்றியோ அதில் வரும் கதாப்பாத்திரத்தைப் பற்றியோ பேசுவாள். ஆக ஆரம்பத்திலிருந்தே இவர்களுக்கான உறவு அன்பானதாகவே இருப்பதில்லை. சீரியல் என்ற பூதம் அன்றும் ஒழியவில்லை. இதில் மோசமான விசயம் என்னவென்றால், இன்றைய சீர்யல்கள் தானாக ஓடிக்கொண்டிருக்கும், அதில் நம் மக்கள் பார்வையாளர்கள் மட்டுமே. ஆனால் இந்த நாவலில் காட்டப்படுவது அன்றைய மக்களும் நாடகத்தில் ஒரு கதாப்பாத்திரமாக இருக்கிறார்கள். பார்ப்பதைவிட சீரியலில் தானும் ஒரு பாத்திரமாக இருக்க முடியும் என்றால் மக்கள் அதிகமாக சீரியலை விரும்புவார்கள். அதுதான் இந்த நாவலின் எச்சரிப்புகளில் ஒன்று.

இன்றைய உலகில் சீரியல் நாடகங்கள் மக்களின் நேரத்தையும் அறிவுக்கான தேடலையும் தொலைய வைத்துவிட்டன. இன்று ஓடும் நாடகங்களில் மக்கள் பார்வையாளர்கள் மட்டுமே. இந்த நாவலில் வரும் சீரியலில் மக்களும் ஒரு கதாப்பாத்திரமாக இருக்கிறார்கள். அதிலும் பெண்கள் அதிகமாக இந்த சீரியலைப் பார்ப்பவர்களாக இருக்கிறார்கள். இது பெண்கள்தான் சீரியல் பற்றாளர்கள் என்று கூற வருகிறதோ என்று தோன்றுகிறது.

மோண்டாக் இனி வாசிப்பதை நிறுத்த முடியாது. அதை விடவும் முடியாது. இதுதான் நிலை. என்றால் இனி எப்படி எங்கே இருப்பது என்ற கேள்வி கடைசி பகுதியில் இழையோடிக் கொண்டிருக்கிறது. நாவலின் இறுதியில், மோண்டாகை இருட்டில் சிலர் சந்தித்து பேசுகின்றனர். அவர்களும் நூல்களை விரும்பும் மனிதர்கள் என்றும் தன்னையும் அறிந்திருக்கிறார்கள் என்றும் தெரிந்துக் கொள்கிறான். அவர்கள் இனி எங்கே போகலாம் என்று பேசிக்கொள்கினறனர். ஒவ்வொருவரும் பல நூல்களை மூளையில் பதிவுசெய்து ஞாபகமாக வைத்திருக்கின்றனர் என்பதை அறிந்தபோது ஆச்சர்யமாக பார்க்கிறான். அவர்கள் ஒவ்வொருவரும் நூல்கள் என்று உணர்கிறான். இனி அவர்கள் இருக்கும் இடத்தில் இருக்க முடியாது. எனவே, அனைவரும் மோண்டாக் முன்னே செல்ல, அவனைப் பின்பற்றி செல்கின்றனர். இத்தோடு நாவல் முடிகின்றது.

நூல்களைப் படிப்பது தவறென கருதும் எந்த அரசையும் ஏற்க முடியாது. அதை அங்கே இடம்பெயர்ந்து செல்பவர்கள் நிரூபிப்பதாக தோன்றுகிறது. ஆனால் இதை பெரும்போக்காக விட்டுவிட்டால் மக்களின் நிலை என்னவாகும் என்று இனி

மக்கள்தான் இப்படியொரு பிரச்சனை வந்தால் எதிர்கொள்ள தயாராக வேண்டும்.

நூல்களின் தேவை அதிகமிருப்பதால்தான் படையெடுப்புகளின்போது நூலகங்கள் தீக்கிரையாக்கப் படுகின்றன. யாழ்ப்பாணம் தமிழ் நூலகத்தை நாமறிவோம். ஆட்சி அதிகாரங்களுக்கு இணையான அறிவும் தகுதியும் நூல்களை வாசித்து உணர்பவர்களுக்குண்டு. அதனால்தான் நூல்களைக் கண்டு ஆட்சி அதிகாரம் பயப்படுகிறது. முன்பிருந்த காலங்களைவிட இன்றைக்கு புத்தகங்களை அதிகம் படிக்க முடியும் என்ற வசதியும் வாய்ப்பும் நிறைய உள்ளன. முன்பைவிட இன்று அனைத்து துறைசார் நூல்களும் உள்ளன. ஆக, அறிவை மிக சுலபமாக பெறமுடியும். மக்களுக்கு வாசிப்பின் அவசியம் பற்றி நாம் எதுமு புதிதாக கூறத் தேவையில்லை. இனி இன்றைய மக்கள் முடிவெடுக்கட்டும்.!

**-- கார்த்தி டாவின்சி.**
(27.1.2020) NH Venue.




**லெ.பிரவீணா**
2ம் வகுப்பு, தஞ்சை

# துளிப்பாக்கள்

வெய்யிலில் பணியாற்றும் அம்மா
இளைப்பாற அழைக்கும்
குழந்தையின் அழுகை!
-----

நிலவின் அழகு
ஜொலிக்கிறது
நெருங்கும் மேகத்தின் முகம்!
.

பிறையாய் தேய்ந்தாலும்
சுற்றி வட்டமாய்
ஒளி வீசும் நிலா!
----

இரவில் சோடியம் விளக்கு
எரிகையில் உற்றுநோக்குகிறேன்
மஞ்சள் பனைமரமாகிறது!
---

தீக்குளித்த மெழுகுவர்த்தி
உடலெங்கும்
கொப்புளங்கள்!
----

கொடிய வறுமை
பசியை ஆற்றுகிறது
அதே பசி!
----

காலைப்பனி விலக விலக
நீரில் பொறிந்து எழும்புகிறது
அந்த மலை!

**சா.கா.பாரதி ராஜா,**
38-3, கைலாசநாதர் கோயில் தெரு,
பெரிய நத்தம்,
செங்கல்பட்டு. 603002.
9944315732, 8610078040

---

ஜெயசூர்யா



# மு.முபாரக் கவிதைகள்

அதிகாலை அவசர
அவசரமாய்
எழ வேண்டிய அவசியம் இல்லை...

பிள்ளைகளை பள்ளிக்கூடத்திற்கு
தயார் செய்ய வேண்டிய
வேலை இல்லை...

பிள்ளைகளுக்கு
வீட்டுப்பாடங்கள்
சொல்லிக் கொடுக்க
வேண்டியதும் இல்லை...

கணவருக்கு உணவு தயார்
செய்து கொடுத்து
வேலைக்கு அனுப்ப வேண்டிய
வேலையும் இல்லை....

புதுப்புது சீரியல்களை
பார்த்து
அழ வேண்டிய
வேதனைகளும் இல்லை...

வீட்டில்
இருக்கின்ற எல்லா
உணவு பொருட்களும்
பணமும் தீர்ந்து போனதால்,
அடுத்த வேளை உணவுக்கு
என்ன செய்வது என்ற கவலைகளைத்
தவிர வேறெதுவும் இப்போது இல்லை!

***

வருடத்தில் பல நாட்கள்
நாங்கள் உறக்கம் கலைந்து
எழுவதற்கு முன்பே
வேலைக்குச் சென்று,
நாங்கள் உறங்கிப் போன
பிறகு வேலையை முடித்துக்கொண்டு
வரும்
அப்பாவின் முகம் மட்டும்
மறந்து போவதே இல்லை...
எங்களுக்காய் உழைத்து
உழைத்து
கைகளிலும் முகங்களிலும்
பட்ட காயங்களின்
வடுவைப் போலவே!

***

நீண்டு வளர்ந்துக் கொண்டே
இருக்கும்,
தலைமுடியை நாளை
வெட்டிக்கொள்ளலாம்...

நீண்டு கொண்டே இருக்கும்
கடனுக்கான வட்டியை,
வருகின்ற நாட்களில்
கட்டிக் கொள்ளலாம்...

நீண்டு நிமிர்ந்து வளர்ந்து
கொண்டிருக்கும்
குடும்பத்தின் வறுமையை,
பின்னொரு நாளில்
ஒழித்துக் கொள்ளலாம்...

நீண்டு கொண்டே இருக்கும்
குடும்பத்தின்
தேவைகளை கொஞ்சம் கொஞ்சமாய்,
குறைத்துக் கொள்ளலாம்...

நீண்டு கொண்டே இருக்கும்
அச்சத்தை,

நம்பிக்கை உள்ளவரை,
எதிர்த்துக் கொண்டே இருக்கலாம்...

நீண்டு கொண்டே போனால்
சிந்திக்காமல்
உயிர் பறிக்கும், கொடுமையான
பசியை என்ன செய்வது?

✸✸✸

வானம் கூட
பக்கமாகத் தான் இருக்கிறது ...
மதம் பார்த்து விலகி
இருப்பவர்களை விட!

✸✸✸

காலையில்
கைகோர்த்து உறவானவர்கள்,
மாலையில்
மண் அள்ளித் தூற்றிக்
கொண்டிருக்கிறார்கள்...

உறவென்று தோள் சாய்ந்து
பாசத்தை பரிசளித்தவர்கள்,
பார்த்தும் பார்க்காதது போல்
கடந்து கொண்டிருக்கிறார்கள்...

மழலை குணம் என்று
கொண்டாடியவர்கள்
தவிக்கவிட்டுச் செல்கிறார்கள்...
ஒரு குழந்தையைப் போல,

கர்ணனின் சொந்தக்காரன்
என்று சொன்னவர்கள்,
கடன்காரன் என்று
கேலி பேசுகிறார்கள்...

நீயின்றி நான் இல்லை
என்று சொன்னவர்கள்,
நீ இருந்தால்
நான் இருக்கமாட்டேன் என
கோபப்பார்வையை வீசி நிற்கிறார்கள்!

✸✸✸

கருவாடகவில்லை
கவிதையாகிறது...
சிறுவர்களின் வலையில்

சிக்கிய மீன்கள்!

✸✸✸

ஆரவாரமில்லாமல்
சாலையை ,
கடந்து கொண்டிருக்கிறது
பணக்கார பிணம்...
ஊரடங்கு நாளில்!

✸✸✸

காய்கறிகளின்
விலை அதிகமென
புலம்புகிறான்...
மளிகைப் பொருட்களை
அதிக விலைக்கு விற்றவன்!

-- மு.முபாரக்
முதுநிலை எழுத்தர்,
எண் 273 வாளாடி கூட்டுறவு வங்கி,
வாளாடி.
இலால்குடி வட்டம்.
திருச்சி மாவட்டம் - 621218.
அலைபேசி எண் 8072600090.

# கைகூ கவிதைகள்

பேச்சு போதை
கதைப்பதை நிறுத்தி விடாதே..!
என் காலப்பயணம் தடைப்படும்..!!

--

முத்தயுத்தம்
இரத்தமில்லா ஒரு யுத்தம் செய்ய
காத்திருக்கிறேன்..!
மொத்த யுத்தமும் இதழ் முத்தம்
மட்டுமே..!!
---

சுவாரசியம்
இது தான் முடிவு என தெரிந்தப் பின்..!
பார்பதோ படிப்பதோ என எதிலும்..!!
என்ன சுவாரசியம்
இருக்கப்போகுது..??
----

சமநிலை
அவள் அதிகாரம் செய்வுமில்லை..!
இவன் அடிபணியவுமில்லை.!!
----

பிரிவு
என்னுள் நீயான உன்னை..!
தேடி தொலைகிறேன் என்னாலும்..!!

---

காமம்
அவள் முனகலும் மூச்சிரைப்பும்..!
பேரின்பக் கவிதை..!!
--

பொய்தூக்கம்
இரவை சிறைபிடிக்க..!
இமையை மூடிக்கொண்ட மூடன்
நான்..!!

--

மனோ குணசேகரன்

# தவித்த விழிகள்

என் கண்
காணாத வரை
தவிக்கும் விழிகள்
கண்ட நொடியில்
கண் இமைகள் மூடி கொள்ளும்
அதிசயம் என்னவோ!

- - -

# ஆசை

நீ வைக்கும் ஆசையெல்லாம்
பேராசை ஆக கூடுமோ
என் பெயரில் !

------

# தேடலின் அனுபவம்

தேடல் யாவும்
தேடி செல்ல கைகிட்டும்
தேடல் பறவைகளாய்
தேடி தின்ற படி
தேடியே சென்ற படி
உலவும் வானமதில்
உல்லாசம் இன்பமதில்
உள்ளம் மட்டும்
உறைந்த படி திரும்ப செய்யும்
எந்தன் வீட்டின் வாசல் முன்னே!
சலித்த வாழ்க்கை பின்னே
சங்கடங்கள் கண்ட பின்னே
சரி எதுவென்று தெரிந்த பின்னே!
எமையும் என் இல்லம் நாடி செல்லும்
தூர தேசம் எதிலும்!

-------

முடிவு

சில முடிவுகளின்
மற்றொரு தொடக்கங்கள்
முடிவற்று கிடக்க காத்திருக்கும்!

--

**கனிமொழி சீனிவாசன்**

1.
விழுகின்ற
ஒவ்வொரு மழைத்துளிக்கும்
மகிழ்ச்சியில் குதிக்கிறது
கடல்.

2.
சிகரத்தில் நிற்பவனுக்கு
கால்களுக்குக் கீழே
பூமி.
பள்ளத்தில் இருப்பவனுக்கு
தலைக்குமேலே
ஆகாயம்.

3.
தன்னிடமுள்ள கடைசி துளி
ஆகாய அமுதத்தையும்
மண்ணுக்கு தர திரட்டுகிறது
இலையின் நுனி.

4.
பூ மலரும் ஓசையையும்;
இமைகள் ஒன்றிணைந்த
ஒலியையும்;
மிகத் துல்லியமாய்
கேட்டிருக்கும் காற்றின்
செவிகள்.

5.
தொலைந்தவர்கள் பலரில்
அகப்பட்டவனிடம்
சொல்லிக் கொண்டிருக்கிறேன்.
என்னை விரைவாய்
கண்டெடுக்கும்படி.

6.
வழக்கம்போல்
சிரிக்கிறது பூ
இதழ் உதிர்ந்தது தெரியாமல்.

7.
நீ நானாக வா
எனக்கு வந்த அக்கனவைப் பற்றி
உன்னிடத்தில் விவரமாய்
சொல்லி முடிக்கிறேன்.

8.
நதியும் வெள்ளமும் மாறி மாறி
முத்தமிட்டுக் கொள்ளும்
சப்தமே சலசலப்பு.

9.
பிள்ளைகளின்
நாருசி அறிந்திடாமலே
கரைகிறது.
விற்பனையாகாத பனிக்கூழ்.

10.
அன்னையைப் போலவே
இதயத்தில் ஈரம் வைத்திருக்கிறது
ஆறுகள்.

- கவிதைகள் ஆக்கம்



பாரியன்பன் நாகராஜன்
82/32 - B பிள்ளையார் கோவில் தெரு,
காமாட்சியம்மன் பேட்டை,
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353

# கொரோனா ....!?

கொரோனா ....!
நீ உயிர் கொல்லி நோய்தான்.....!
உலகமெங்கும் மானுட
அழிவை தந்தாய் எனினும்....?
நீ -
நாடு பார்க்கவில்லை....!
வல்லரசு பார்க்கவில்லை....!
மதம் பார்க்கவில்லை...!
ஏற்றத் தாழ்வுகளை
எள்ளளவும் கண்டுகொள்ளவில்லை...!
எல்லோரையும்
சமமாய் பாதித்தாய்....?
இயற்கையின் பதிலடிக்கு முன்னே
இங்கே எல்லோரும் ஒன்றுதான்..!
காரணம் -
இயற்கையை அழித்தது இங்கு எல்லோரும்
தான்....?
என்பதை
மறந்து போன
மனிதர்களுக்கு
மறுபடியும்
நினைவூட்டினாய்...!

உன் பயத்தால் தான்
இங்கு எல்லோருக்கும்
புரிந்தது...?

வெளிநாட்டு வேலை
வேண்டாம் வேண்டாம்...!
பணமும் காசும்
பசிக்கு உதவாது....!
மாட மாளிகையும் .
கோபுர வீடுகளும்...
வாழ்க்கையின் வசந்தம் இல்லை....!

உயிருக்கு பயந்து
வீட்டுக்குள்
அடைந்த போதுதான்
இங்கே -
மனிதம் புரிந்தது...!
மருத்துவர்களின்
மகத்துவம் தெரிந்தது...!

தூய்மை பணியாளர்களின்
தூய இதயம் தெரிந்தது....!
காவல் துறையினர்
கடமை புரிந்தது...!
மின் துறையினர்
மின்னுதல் தெரிந்தது....!

விவசாயி மட்டுமே
இங்கு -
எல்லோருக்கும்
கடவுளானார்..!?

பசித்தவருக்கு உணவு
அளிப்பவர்தான்
உயர்ந்தவராய்
உணரப்பட்டார்....!

மூடிய கதவுகளுக்கு
பின்னால்தான்...
எங்களுக்கு -
உறவு புரிந்தது...!
மனைவியின் சிரமம்
புரிந்தது...!
உறவுகளின் உன்னதம் புரிந்தது...!
குழந்தைகளின் குறும்பு புரிந்தது...!
ஏன் !? -
எனக்கே நான் யார்?
என்பது
இப்போதுதான் புரிந்தது....!?

நன்றி கொரோனா ..!
அழிவை தந்தாலும்...!
அகிலத்திற்கு
அனைத்தையும் புரிய வைத்தாய்...!?



முனைவர்.சா.சம்பத்
தேசிய பயிற்சியாளர்
மன்னார்குடி

# கொரோனா பசி

இரைத்தேடி அலையும்
ஒரு ஆந்தையைப்போல்
வௌவாலைப் போலன்றி
ஊரடங்கில் கதவடைத்த வீடுகளின்
வாசல்களை முகர்ந்து
தெருநாய்களோடு திரிகிறேன்
பசித்தின்னும் வயிற்றோடு
முழுநிலவின் விரல்பிடித்துப்
பேரிருளில் நான்

நோய்த்தொற்று நாளுக்குநாள்
பெருகிக்கொண்டிருக்கும்
அசாதாரண சூழலில்
சாதாராண சளிக்கும்
கொரானா சளிக்கும் வேறுபாடறியாது
குரல்வளையை நெரிக்கிறது
கோடைவெயில் உஷ்ணம்...

மூச்சடக்கி மூலிகைசாறு அருந்தி
வெதுவெது நீராடி
வேப்பங்கொழுந்து மென்று
ஊடகவாய்கள் உளரும்
உணவுக் கட்டுப்பாடுகள்
ஒட்டுமொத்தத்தையும் அனுசரித்து
வாழ்விற்கும் சாவிற்கும்
இடைநின்று தவிக்கும்
உள்ளிருப்புப் போராட்டம்
எமக்கில்லை ஆயினும்
சாலைகளை நிர்வகிக்கும்
காவல்துறையின் கண்ணில்
மண்ணைத்தூவி வாழ்ந்திடல்
சவால்நிறைந்த ஒன்றுதான்...

உள்நோக்க காரணிகளின்
உலக அரசியலில் சிக்கி
வைரஸ் தாக்கியல்ல
வயிற்றுப்பசி அழித்துச்
சடலங்கள் குவிய
சாலைகளின் மறைவிடங்கள்
விழித்துக்கொள்ளலாம்
பிணநாற்றத்தில்...
மன்றாடிக் கேட்கிறேன்
விரைவில் வெளியிடுங்கள்
எங்கள் நோய்க்குமான மருந்தையும்
மிக சீக்கிரம் கண்டறிந்து!

-- பொன்.தெய்வா
ஐவேலி



சுபா சபரி
மன்னார்குடி

# விடுதிகளாகும் வீடுகள்



விஜயவர்மன்

சென்ற தலைமுறை வரை பெண் விடுதலை, பெண் சுதந்திரத்திற்காக போராடிக் கொண்டிருந்தோம். இனி வரும் காலங்களில் ஆண் விடுதலை, ஆண்களின் சுதந்திரத்திற்காக போராட வேண்டியிருக்கும் போலும். வரதட்சணை வாங்க கூடாது எனப் பெண்களுக்காக குரல் கொடுத்த காலம் மாறி, பொருளாதார வசதி குறைவான ஆண்களின் திருமண புறக்கணிப்பை எதிர்த்து நீச்சலடிக்கும் சூழலிற்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம் என்பதை குத்தாலம் அருகே திருமணஞ்சேரியில் உள்ள கோயிலின் வரிசையில் காத்திருக்கும் 30 வயது கடந்த ஆடவர்களை காணும் பொழுது புரிகின்றது.

நல்ல குடும்பம், நற்பண்புடையவர்கள் என்ற அளவீட்டுகளை கொண்டு வரன் தேடிய காலம் முடிவுற்றது; நல்ல வேலை, நல்ல சம்பளம் மட்டுமே மாப்பிள்ளைகளாக அலங்கரிக்கப்பட்டிருப்பவர்களின் Price tag. பொருளாதார சுதந்திரம் ஒரு புறம் தேவையெனினும், இரு மனங்களும் இணைந்து வாழும் வாழ்வு தான் திருமண பந்தம்.

அங்காடிகளுக்கு சென்று அலங்கரிக்கப்பட்ட அட்டைகளின் உள்ளேயிருக்கும் பொருட்களின் தரமறியாது வாங்கி வருவது போல, இன்றைய திருமண நிச்சயங்கள் நிகழ்கின்றன. இரு மனங்கள் இணைந்து வாழும் இல்லறமாக அல்லாமல், இரு விடுதி நண்பர்கள் போல் கணவன் மனைவி உறவுகள் மாறிவிட்டன. வாரத்தில் 6 நாட்கள் வேலை, ஒரு நாள் விடுமுறையில் ஓய்வு; இதுவே தொடர் கதையாகி போனதால், அருகருகே உள்ள உறவினர்களின் இல்லங்களுக்கு செல்வது கூட இன்றைய நாட்களில் தொலை தூர பயணமாகிவிடுகின்றது.

மிகுதியான நேரம் அருகில் ஓரே ஒரு துணையுடன் வாழ பழகிய காரணத்தினால், ஒரு குடும்பமாக நம்மால் வாழ முடிவதில்லை. விடுமுறைகளுக்கு ஊருக்கு சென்றாலும் ஒரே வீட்டிற்குள் தனித் தனி அறைகளில் முடங்கிவிடுகின்றோம். நாம் அனைவரும் ஒரு குடும்பத்தை சேர்ந்த உறவுகள் என்பது மாறி, விடுதிகளில் தங்கியிருக்கும் நண்பர்கள் போல் எப்போதாவது முகத்தில் சிரிப்பை மட்டும் வெளிக்காட்டிக் கொள்ளும் அயல் மனிதர்களாக வாழ்கிறோம்.

இரு தலைமுறைகளுக்கு முன்பு கூட்டு குடும்பங்களாக வாழ்ந்த நாம், சென்ற தலைமுறையில் தனி தனியாக சிதறி போன பொழுதிலும் உறவுகளிடமிருந்து விலகவில்லை. மாதத்திற்கொரு முறை தாத்தா, பாட்டியை காண செல்வது; அவ்வப்பொழுது உறவினர்கள் வீட்டிற்கு செல்வது, தொலைபேசியில் உரையாடுவதென ஏதோவொரு வகையில் உறவுகளுடன் தொடர்பிலிருந்தோம்.

தொலைபேசியில் பேசுவதற்கு கட்டணம் செலுத்திய காலத்தில் கூட பல நூறுகள் செலவு செய்து பேசிக் கொண்டிருந்தோம். இன்று இலவசமாக அளவில்லா நிமிடங்கள் பேசுவதற்கு வாய்ப்பிருந்தும் யாரையும் தொடர்பு கொள்ள தோணுவதில்லை. உலகம் சுருங்கி கைகளுக்குள் வரும் தருணம், வீட்டில் இருப்பவர்கள் அருகிலிருந்தும் தூரமாக விலகி போகின்றார்கள்.

தன் குடும்பம், தன் கணவன், தன் மனைவி என வட்டங்களை சிறியதாக வரைய தொடங்கும் பொழுதே, நம் வாழ்க்கை துணையின் பெற்றோர்களை அந்த வட்டத்தில் இருந்து வெளியேற்றிவிடுகிறோம். நிற்க, அவர்களை மட்டுமே வெளியேற்றுகிறோமேயன்றி, அவர்களின் கையில் உள்ள பணத்தையல்ல.

முகமறியாத, நேரில் சந்தித்திடாத இணையவழி நண்பர்களிடம் இரவு பகலாக பகிரியில் (Whatsapp) அரட்டை அடிக்கின்றோம்; மனம் விட்டு பேசுகின்றோம். சமீபத்தியமாக, நம் உறவினர் ஒருவருக்கு நாமாக அழைத்து பேசியது எப்பொழுது என நினைவிருக்கிறதா? உறவினரிடம் பேசுவது ஒரு புறமிருக்கட்டும்; தத்தம் பெற்றோருக்கும், தம் துணைவரின் பெற்றோருக்கும் அவர்கள் அழைக்காமல், தாமே அழைத்து பேசியது எப்பொழுது என்று யோசித்தால் ஒவ்வொரு வீட்டிலும் உறவுகளுக்கு இடையே உள்ள இடைவெளி புரியும்.

ஒரே வீட்டில் வாழ்வதால், ஒன்றாகயிருக்கின்றோம் என நினைப்பது, ஒரே பேருந்தில் முன் இருக்கையில் ஒருவரும் பின் இருக்கையில் ஒருவருமாக தனித் தனியாக பயணிப்பதற்கு ஈடாகும். அடுத்த நிறுத்ததில் யார் இறங்குவார் என தெரியாது, பயணிக்கும் வரை ஒன்றாய் பயணிக்கலாமே?!

-- G.S.விஜயவர்மன்

# தொலைதல்

தொலைப்பேசியிலேயே
காலங்கள் விரைவாய்
தொலைந்துக்
கொண்டிருக்கின்றன.

முகநூல் முதலான
இணைய வழி பரிமாற்றங்கள்
இருக்கின்ற
நேரமனைத்தையும்
ஈர்த்துக் கொள்கின்றன.

நல்லதாய் ,கெட்டதாய்
நிறைய செய்திகள்
விருப்பமாய்...
வாழ்த்தாய்...
விரல்களின் நாட்டியமாய்
விரைவாக நடைபெறுகின்றன.

கவிதையென்றும்
கதையென்றும்
கட்டுரையென்றும்
உண்மைகளும் போலிகளும்
உல்லாச கிறுக்கல்களாய்
துதிப்பாடும் குழுக்களோடு
துடிப்புடன் நடைபெறுகின்றன.

நமக்கான
நன்மையும் தீமையுமாய்
நிறைய இருப்பினும்
கண்கள் பூத்திட
காலங்கள் ஓடிட
இணையமும் செல்லிடபேசியும்
இணைந்த வாழ்வினில்
காலம்
தொலைந்துக் கொண்டிருக்கிறது

--

பல்லவிகுமார்
விருத்தாசலம்
9942347079




ப. சௌந்தரியா
பொறியியல் முதலாம் ஆண்டு
அஞ்சலை அம்மாள் மகாலிங்கம்
பொறியியல் கல்லூரி

**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்**
**பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

# 2015ம் ஆண்டு முதல்
# மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

<u>நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்</u>
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

மன்னையின் மைந்தர்கள்
மண்ணின் மாற்றத்தை நோக்கி

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal   ThiravukoImagazine